Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

நல்லூர் இளைஞர் நூலகம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM — Peoples Daily — மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | வைகாசி 06 | [19-05-98] | புதன்கிழமை | ஓசை 90

## அரச ஊழியர் அனைவரையும் குமண கப்பலில் ஏற்ற மறுப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்று பருத்தித்துறை துறைமுகத்திற்குச் சென்ற 'நகர' கப்பல் மூலம் திருக்கோணமலைக்குச் செல்லவிருந்த பயணிகளைப் பருத்தித்துறையில் இருந்து காங்கேசன்துறைதுறைமுகத்திற்குக் கொண்டு செல்வதற்கு 'குமண' கப்பல் கப்டன் மறுத்துவிட்டார். பின் 53 பயணிகளை மட்டும் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு ஏற்றிச் சென்றுள்ளார். இவர்களுள் 13 பேர் ஏற்கனவே கூட்டுப்படைத் தலைமைச் செயலகத்தால் அனுமதி வழங்கப்பட்டவர்களாம். போதனா வைத்தியசாலையில் இருந்து இடமாற்றம் பெற்றுச் செல்லும் மருத்துவர்கள் மிகுதி 40 பேரும் நகர கப்பல் மூலம் திருக்கோணமலைக்குச் செல்வதற்காக யாழ் செயலகத்தில் தமது பெயரை பதிவு செய்துகொண்ட 146 பேரில் 40 பேர் என்பது (4 ஆம் பக்கம் பார்க்க)

# 3 மாகாணங்களில் ஐ. தே. க. தோல்வி

# 50 வீத மக்கள் எதிராக வாக்களிப்பு

## மாகாணசபை தேர்தல் இறுதி முடிவுகள்

### ஊவா மாகாணம்

| கட்சிகள் | பெற்றவாக்குகள் | வெற்றி பெற்ற ஆசனங்களும், மேலதிகமும் |
|---|---|---|
| ஐ.தே.க. | 3,54 935 | 20 |
| பொ.ஐ.மு | 1.27 217 | 10 |
| ஜ.ஐ தே.மு | 52,790 | 04 |
| ந.ச ச.க | 3,399 | — |
| மு கா | 4.864 | — |
| சுயேட்சை | 2,062 | — |

### தென் மாகாணம்

| கட்சிகள் | பெற்றவாக்குகள் | வெற்றி பெற்ற ஆசனங்களும், மேலதிகமும் |
|---|---|---|
| ஐ.தே.க | 4,038,412 | 27 |
| பொ.ஐ மு | 3,082,726 | 22 |
| ஜ.ஐ.தே.மு | 1,016.791 | 06 |
| ந.ச.ச.க | 7,194 | — |
| முஸ்லிம் காங்கிரஸ் | 2.826 | — |
| சுயேட்சை 1 | 10.428 | — |
| சுயேட்சை 2 | 166 | — |

### மேல் மாகாணம்

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | வெற்றி பெற்ற ஆசனங்களும், மேலதிகமும் |
|---|---|---|
| ஐ. தே. க. | 8,15,513 | 41 |
| பொ. ஐ. மு. | 8,32,524 | 45 |
| ஜ. ஐ. தே. மு. | 3,24,817 | 17 |
| மு கா. | 18,330 | 01 |
| [illegible] | 15,50[illegible] | [illegible] |

## தலை நகரமும் பறிபோனது

(கொழும்பு)

நேற்று முன்தினம் இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தலின்படி மேல்மாகாண சபை உட்பட மூன்று பிரதான மாகாண சபைகளை ஐக்கிய தேசியக் கட்சி இழந்தது. மேலும் ஏழு மாகாணங்களில் இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தலில் நான்கு மாகாணசபைகளை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றியபோதும் 50 வீதத்திற்கும் அதிகமானமக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக வாக்களித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை, நாட்டின் தலைநகரம் உள்ளிட்ட மேல்மாகாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்டுள்ள தோல்வியானது அக்கட்சிக்கு பெரும் அதிர்ச்சி அளித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஏழு மாகாண சபைகளுக்கான தேர்தலில், மலையகம் உள்ளடங்கிய மத்திய, ஊவா, சப்பிரகமுவா மாகாணங்கள் உட்பட வடமத்திய மாகாணத்திலும் ஐக்கிய தேசியக் கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

இதேவேளை, மேல் மாகாணம், தென் மாகாணம், மற்றும் வடமேல் மாகாணம் என்பனவற்றில், எதிர்க்கட்சிகள் அறுதிப் பெரும்பான்மையைப் பெறாவிட்டாலும், அவை கூட்டுச்சேரும் பட்சத்தில், இம்மூன்று மாகாணங்களின் ஆட்சியைக் கைப்பற்றும் நிலையில் உள்ளன.

மேலும், மேல் மாகாணம், தென் மாகாணம், வடமேல் மாகாணம் ஆகிய சிங்களவர்கள் செறிந்து வாழும் மாகாணங்களை ஐ.தே.கட்சி இழந்தமையானது பெரும் அரசியல் பின்னடைவெனவும், அதிலும் தலைநகரம் உட்பட மேல் மாகாண சபையை இழந்தமை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்பாராத இடத்தில் வீழ்ந்த பலமான அடி எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## முக்கிய அமைச்சர்கள் தொகுதியில் படுதோல்வி

(கொழும்பு)

சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் [illegible] சிங்காவின் பியகம தொகுதியிலும் அமைச்சர் விஜயபால மெண்டிசின் கட்டான தொகுதி [illegible] ஆகியோரின் தொகுதிகளிலும் ஐக்கியதேசியக் கட்சி தோல்வியடைந்துள்ளது.

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## மீட்புநிதி சேகரிப்பு

இன்று புதன்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் மாலை 3.00மணி தொடக்கம் 4.00 மணிவரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை காலமும் மீட்புநிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் இன்று தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்த முடியும் என தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## பிரேதபரிசோதனை அறிக்கை

[கொழும்பு]

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத் முதலியின் மரணம் தொடர்பான விசாரணையில் அவரதும் அவரது கொலை (4ஆம் பக்கம் பார்க்க)

## மேல் மாகாண முதல்வராக சந்திரிகா வரலாம்

[கொழும்பு]

மாகாணசபைத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிட்ட சந்திரிகா குமாரணதுங்க மூன்று இலட்சத்து ஐம்பதினாயிரத்திற்கும் அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்று முன்னணியில் இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விருப்பத்தேர்வு வாக்குகளில் இவருக்கே அதிக வாக்குகள் கிடைத்திருப்பதாகவும் இவரே மேல் மாகாண முதலமைச்சராகக் கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் ராவய ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

மேலும் கம்பஹா மாவட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு மூன்று லட்சத்து அறுபதினாயிரம் வாக்குகள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது

சென்ற பாராளுமன்ற தேர்தலில் அத்துலத்முதலி இரண்டு இலட்சத்து முப்பத்தையாயிரத்திற்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்று மிகக் கூடிய விருப்புத்தேர்வு வாக்குகளை [illegible]

| | | |
|---|---|---|
| மு கா | 4,864 | — |
| சுயேட்சை | 2,062 | — |

## தென் மாகாணம்

| கட்சிகள் | பெற்றவாக்குகள் | வெற்றி பெற்ற ஆசனங்களும், மேலதிகமும் |
|---|---|---|
| ஐ.தே.க | 4,038,412 | 27 |
| பொ.ஐ மு | 3,082,726 | 22 |
| ஜ.ஐ.தே.மு | 1,016,791 | 06 |
| ந.ச.ச.க | 7,194 | — |
| முஸ்லிம் காங்கிரஸ் | 2,826 | — |
| சுயேட்சை 1 | 10,428 | — |
| சுயேட்சை 2 | 166 | — |

## மேல் மாகாணம்

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | வெற்றி பெற்ற ஆசனங்களும், மேலதிகமும் |
|---|---|---|
| ஐ. தே. க. | 8,15,513 | 41 |
| பொ. ஐ. மு. | 8,32,524 | 45 |
| ஜ. ஐ. தே. மு. | 3,24,817 | 17 |
| மு கா. | 18,330 | 01 |
| ந. ச. ச. க. | 15,502 | — |
| சுயேட்சை 1 | 2,907 | — |
| ஜ. தொ. கா. | 2,624 | — |
| சுயேட்சை 2 | 2 488 | — |
| ம. சு. மு. | 1,633 | — |

## சப்பிரகமுவா மாகாணம்

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | வெற்றி பெற்ற ஆசனங்களும் மேலதிகமும் |
|---|---|---|
| ஐ. தே. க | 3,79,005 | 24 |
| பொ. ஐ. மு. | 2,58,383 | 14 |
| ஜ ஐ. தே. மு. | 92,719 | 05 |
| ந ச. ச. க. | 13,196 | 01 |
| மு. கா. | 957 | — |
| சுயேட்சை | 746 | — |

## வடமத்திய மாகாணம்

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | வெற்றிபெற்ற ஆசனங்களும் மேலதிகமும் |
|---|---|---|
| ஐ தே. க. | 2,15,858 | 18 |
| பொ. ஐ. மு. | 1,43,429 | 11 |
| ஜ. ஐ. தே. மு. | 46,330 | 03 |
| மு. கா. | 6,804 | 01 |
| ந. ச. ச. க. | 2,604 | — |

## வடமேல் மாகாணம்

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | வெற்றி பெற்ற ஆசனங்களும், மேலதிகமும் |
|---|---|---|
| ஐ. தே. க. | 3 92,392 | 25 |
| பொ. ஐ. மு' | 3,10,773 | 18 |
| ஜ. ஐ. தே. மு. | 1,44,295 | 09 |
| ந. ச. ச. க | 8,506 | — |
| மு. காங்கிரஸ் | 7,172 | — |

## மத்திய மாகாணம்

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | வெற்றி பெற்ற ஆசனங்களும் மேலதிகமும் |
|---|---|---|
| ஐ. தே. க. | 4,98,238 | 32 |
| பொ. ஐ. மு. | 2,49 443 | 15 |
| ஜ ஐ. தே. மு. | 1,50,848 | 09 |
| சுயேட்சை 1 | 7,749 | 01 |
| சுயேட்சை 1 | 15,770 | 01 |
| மு. கா. | 10,232 | — |
| ந. ச. ச. க. | 6,092 | — |

ஐ. தே. க, ஐக்கிய தேசியக் கட்சி, பொ. ஐ. மு. பொதுமக்கள் ஐக்கியமுன்னணி, ஜ ஐ. தே. மு. - ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, ந. ச. ச. க. - நவசமசமாஜக் கட்சி, மு. கா. - முஸ்லிம் காங்கிரஸ், ஜ. தொ. கா. - ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ்.

பெற்ற ஏழு மாகாண சபைகளுக்கான தேர்தலில், மலையகம் உள்ளடங்கிய மத்திய, ஊவா, சப்பிரகமுவா மாகாணங்கள் உட்பட வட மத்திய மாகாணத்திலும் ஐக்கிய தேசியக் கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெற்ற ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

ணம், தென் மாகாணம், மற்றும் வட மேல் மாகாணம் என்பனவற்றில், எதிர்க்கட்சிகள் அறுதிப் பெரும்பான்மையைப் பெறாவிட்டாலும், அவை கூட்டுச்சேரும் பட்சத்தில், இம் மூன்று மாகாணங்களின் ஆட்சியைக் கைப்பற்றும் நிலையில் உள்ளன.

தென் மாகாணம், வடமேல் மாகாணம் ஆகிய சிங்களவர்கள் செறிந்து வாழும் மாகாணங்களை ஐ.தே.கட்சி இழந்தமையானது பெரும் அரசியல் பின்னடைவெனவும், அதிலும் தலைநகரம் உட்பட மேல் மாகாண சபையை இழந்தமை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்

# முக்கிய அமைச்சர்கள் தொகுதியில் படுதோல்வி

(கொழும்பு)

சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தொகுதி உட்பட பல முக்கிய அமைச்சர்களின் தொகுதிகளில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிதோல்வியடைந்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் பியகம தொகுதியிலும் அமைச்சர் விஜயபால மெண்டிசின் கட்டானதொகுதியிலும் அமைச்சர் வீரசிங்க மல்லி மாராட்சியின் கொலன்னாவ தொகுதியிலும் அமைச்சர்கள் சிறிசேனகூரே, ஏ.ஜே. ரணசிங்க, காமினிலொக்குகே ஆகியோரின் தொகுதிகளிலும் ஐக்கியதேசியக் கட்சி தோல்வியடைந்துள்ளது.

இதேவேளை பல ஐக்கியதேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் மிகக்குறைந்தளவு பெரும்பான்மையில் வெற்றிபெறமுடிந்தது என தெரிவிக்கப்படுகிறது.

# கொழும்பை இழந்தது அரசிற்கு பலமான அடி

மேல் மாகாணசபை தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றமை எதிர்க்கட்சிகளின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதுடன் ஐக்கிய தேசிய கட்சி ஏனைய மாகாணங்களில் தோல்வியை தழுவியதற்கு சமனாகும் என ராவய பத்திரிகை ஆசிரியர் ஐவன் தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த மாகாண சபைகளுக்கான தேர்தல்களில் எதிர்க்கட்சிகளின் கூட்டு முன்னணியான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மேல் மாகாண சபையில் பெற்ற வெற்றியானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக கருதப்படுகிறது. ஏனெனில் இலங்கையின் மொத்த சனத்தொகையில் 28 சதவீதத்தினர் இம் மாகாணத்தில் வாழ்கின்றதுடன் மொத்த தேர்தல் தொகுதி வாக்காளர்களில் மூன்றிலொரு பகுதியினர் இம் மேல் மாகாணத்திலேயே வாழ்கின்றன.

இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மேல் மாகாணத்திலேயே பெருமளவு கைத்தொழில்கள் மற்றும் வர்த்தக தொடர்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐ. தே. கட்சி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியபோதிலும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மேல் மாகாணத்தை எதிர்க்கட்சிகளின் கூட்டு முன்னணி கைப்பற்றியதினால் ஐ. தே கட்சியின் ஏனைய வெற்றிகளும் தோல்விகளாகவே கருதப்படுகின்றன.

இதேவேளை இத்தேர்தலுக்கான பிரசாரக்கூட்டங்களின் போது லலித் அத்துலத்முதலி, சந்திரிகா குமாரணதுங்கா ஆகியோர் தாம் மேல் மாகாணத்தை கைப்பற்றும் பட்சத்தில் நகரசபை, மாநகரசபைகளைக் கலைத்து ஸ்திர ஆட்சியை நிலைநாட்டுவோம் என தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

எதிரணியினர் ஆட்சி அமைக்கக்கூடிய இம் மாநிலங்களால் ஜனாதிபதிக்கு பல நெருக்கடிகள் தோன்றலாம் எனவும் ஐவன் தெரிவித்துள்ளார்.

மேலும் தலைநகரின் கட்டுப்பாடு எதிர்க்கட்சிகள் வசம்செல்வது அரசுக்குதர்ம சங்கடமாக இருக்கும் எனவும், உள்ளூர் வரி விதிப்பு, பொலிஸ் நிர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிறந்த தலைமை இன்மையே தோல்விக்கு காரணம்

(கொழும்பு)

திறம்பட சட்சியைக் கொண்டு நடாத்துவதற்கு ஒரு தலைவன் இல்லாததே ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிஎதிர்பார்த்தவெற்றியை ஈட்டமுடியாமைக்குக் காரணம் என லக்திவ ஆசிரியர் வினி எத்திகொட தெரிவித்துள்ளார்.

மேற்படி முன்னணியின் முன்னேற்றகரமான கொள்கையை மக்களிடம் உரிய முறையில் கொண்டு செல்வதற்கு ஏற்ற ஒரு தலைமை இருக்கவில்லை. இதனால் சிறந்த செயல்திட்டங்களை உரிய முறையில் மக்கள்முன்வைக்க முடியாமல் போனதும் கட்சியின் உறுப்பினர்களிடையே காணப்பட்ட நழுவல் கொள்கைகளும் கட்சிக்குள் உட்பூசல்களை விரிவுபடுத்த உறுப்பினர்கள் முயன்றதுமே எதிர்பார்த்த வெற்றியை இக்கட்சி பெறமுடியாமைக்குரிய காரணங்களாகும்.

இதேவேளை லலித் அத்துலத்முதலியின் கொலையைத் தொடர்ந்து கட்சியை திறம்பட நடத்த தலைவர்கள் தயங்கியதுடன் தம்மைப் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக செயல்பட்டமையும் இக்கட்சியின் இன்றைய நிலைக்குக் காரணம் என வினி எத்திகொட மேலும் தெரிவித்துள்ளார்.

பலமான அடி எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அவரதும் அவரது கொலை

(4ஆம் பக்கம் பார்க்க)

# மேல் மாகாண முதல்வராக சந்திரிகா வரலாம்

[கொழும்பு]

மாகாணசபைத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிட்ட சந்திரிகா குமாரணதுங்க மூன்று இலட்சத்து ஐம்பதினாயிரத்திற்கும்அதிகமானவிருப்பு வாக்குகளைப் பெற்று முன்னணியில்இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விருப்பத்தேர்வு வாக்குகளில் இவருக்கே அதிக வாக்குகள் கிடைத்திருப்பதாகவும் இவரே மேல் மாகாண முதலமைச்சராகக் கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் ராவய ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

மேலும் கம்பஹா மாவட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு மூன்றுலட்சத்து அறுபதினாயிரம் வாக்குகள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது

சென்ற பாராளுமன்ற தேர்தலில் அத்துலத்முதலி இரண்டு இலட்சத்து முப்பத்தையாயிரத்திற்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்று மிகக் கூடிய விருப்புத்தேர்வு வாக்குகளை பெற்றமை தெரிந்ததே.

## மேல் மாகாணத்தில் பல மாறுதல்கள் நிகழலாம்

பி. பி. ஸி. நிருபர் தெரிவிப்பு

(கொழும்பு)

மேல் மாகாணத்தின் தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றுள்ளதைத் தொடர்ந்து அம் மாகாணத்தில் பல மாறுதல்கள் ஏற்படலாம் என ஊகம் தெரிவிக்கப்படுகிறது. மாநகர சபை நகரசபைகளிலும் பல மாறுதல்கள் ஏற்படலாம் என பி. பி. ஸியின் சிங்கள சேவை கொழும்பு முகவர் எல்மே பெர்ணாண்டோ தெரிவித்தார்

இதன் மூலம் கொழும்பின் கட்டுப்பாடு எதிர்க்கட்சியினர் வசம் வந்துள்ளமை அரசை சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

## இணைந்து எதிரணிகள்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பிரமுகர்களுக்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பிரமுகர்களுக்கும் இடையே நேற்று பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றுள்ளதாக தெரிய வருகிறது.

இப் பேச்சுவார்த்தைகள் மிகவும் திருப்திகரமாக அமைந்ததாகவும் இரு கட்சிகளும் தம்மிடையே நல்லுறவைப் பேணுவதெனவும் இணைந்து செயற்படுவது எனவும தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## செயற்பட தீர்மானம்

இவ்விருகட்சிகளும் மாகாண சபைகளில் இணைந்து செயற்படுமானால் ஐ. தே. கவிற்கு பெரும் நெருக்கடி ஏற்படும் என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## லலித் கொலை தொடர்பாக புதிய விசாரணைகள்?

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத் முதலி சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பான விசாரணை முதலிலிருந்து ஆரம்பிக்கப்படலாம் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேல் மாகாண சபையை எதிரணியினர் கைப்பற்றியுள்ளதைத் தொடர்ந்தே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாகாண சபைக்கு உள்ள அதிகாரங்களை வைத்துக் கொண்டு இக்கொலை குறித்து விசாரணை செய்யுமாறு பொலிசார் பணிக்கப்படலாம் என மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## உலங்குவானூர்தி நோட்டம்

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியை சிறிலங்கா உலங்கு வானூர்தி ஒன்று நேற்று காலை 10. 30 மணியளவில் வட்டமிட்டு நோட்டமிட்டது.

ஆனையிறவுப் பக்கமாக இருந்து வந்த இவ் உலங்கு வானூர்தி பருத்தித்துறை உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, தொண்டமானாறு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

நாகலிங்கம் சின்னம்மா அல்லது தங்கம்மா ஆகிய எனது அடையாள அட்டை (356112512V) பிறவுண் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.
(4906)

### தேவை

தையலில் தேர்ச்சி பெற்ற பெண் தொழிலாளர் உடன் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி ஜெயசங்கர் தச்சுத் தொழிற்சாலை, 70, பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம். (4907)

### துளிர்

சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ். மற்றும் சுபமங்களா, குன்றின் குரல், விருட்சம், சலனம், செம்மலர் போன்ற சஞ்சிகைகளும் தரமான புத்தகங்களும் விற்பனையாகின்றன. விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலையம், 405, அருச்சுனா வீதி, (புதிய பஸ் நிலையம் முன்) யாழ்ப்பாணம். (4871)

### உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள் றேடியோக்கள்

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஒட்டோமெற்றிக், வைண்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ். 284, ஆரியகுளம் சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-6633)

### Your Watches & Radios?

Repairs of Watc es&Radios Guaranteed DILKA WATCH& RADIO WORKS, 284 S anley Road, Ariyakulam Junction, Jaffna. Branch: Kandy Road, Chavakachcheri.
(சி-6608)

### தளபதி நியமனம் ரி.வி. நிலையம் சேதம்

(பரமாஸியோ)

சூரினாமில் புதிதாக இராணுவத்தளபதி ஒருவர் நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்து

## வேலை வாய்ப்பு

பட வரைஞர் தொழிலில் முன்னனுபவம் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விரும்புவோர் தகுந்த சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.


(இயந்திரவியல் படவரைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

**விண்ணப்ப முடிவு திகதி:- 28-05-1993**

அனுப்ப வேண்டிய முகவரி:-
விளம்பர இல. 188
மே/பா ஈழநாதம்
61, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(4905)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



| வீரப் பிறப்பு: | வீரச் சாவு |
|---|---|
| 1973 | 1992 |
| — | — |
| 04 | 05 |
| — | — |
| 08 | 30 |

### வீரவேங்கை இன்பன்


[கணேசபிள்ளை துஷ்யந்தன் (கண்ணன்)]

திதி: 19-05-93

வாழ்வின் அர்த்தத்தை
இரத்தத்தால் எழுதிச் சென்றவனே
தமிழீழ மெங்கும் புகழுடன்
வாழும் உன் பெயர்.

நிராகரன் வீதி, கோப்பாய் வடக்கு. (4901) குடும்பத்தினர், நண்பர்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## கொழும்பில் கூழுகதேர்தல் கண்காணிப்பாளர் அறிவிப்பு

மாகாணசபைத் தேர்தல்களை கண்காணிக்கவென இங்கு வந்துள்ள சர்வதேச அவதானிப்பு குழுவைச் சேர்ந்த 25 உறுப்பினர்கள் 17 மாவட்டங்களில் உள்ள வாக்களிப்புநிலையங்களுக்கு நேற்று முன்தினம்விஜயம் செய்தனர்.

இவர்கள் இன்று கொழும்பு திரும்புவர். கொழும்பில் இந்தியாவைச் சேர்ந்த தேர்தல் அவதானிப்பாளரான ஏக் கொன்சல்ட் 26 வாக்களிப்பு நிலையங்களுக்கு விஜயம் செய்த பின்னர் வாக்களிப்பு அமைதியான முறையில் நடைபெற்றதாக தெரிவித்தார்.

தேர்தலுக்குப்பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேர்தல் நடைபெற்ற 7 மாகாணங்களிலும் வன்முறைச் சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

## கரும்புலிகள் தின ஆலோசனைக் கூட்டம்

**இடம்:** நெ. ம. ம. வித்தியாலயம்

**காலம்:** 20-05-93 வியாழன் பி.ப.4-00மணி

வடமராட்சிப் பிரிவிலுள்ள சகல சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் இவர்களில் யாராவது 2 அங்கத்தவர் தவறாது சமுகம் தருமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

ச. ச. நிலைய ஒன்றியம், வடமராட்சி.

(3430)

## 60-ம் நாள் நினைவலைகள்



செல்வி

### விஜயரூபா திருநாவுக்கரசு

(முன்னாள் கதிரேசன் 'குமார' மகாவித்தியாலய ஆசிரியையும், யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவியும்)

| ரோஜா மலர்ந்தது: | ரோஜா மடிந்தது: |
|---|---|
| 04. 08. 1969 | 19. 03. 1993 |

அன்பின் பிறப்பிடமே!
பாசத்தின் தங்கையே!
நேசத்திற்குரிய அக்காவே!
காங்கேசன்துறையில் பிறந்தாய்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறி 1992 / 93

ஐந்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவமும், ஆண்டு 9 [தரம்8] கல்வித் தகைமையும் கொண்ட அரசாங்க/ அரச கூட்டுத்தாபன/ தனியார் நிறுவனங்களில் அல்லது சுயதொழில் (விவாசாயம், மீன்பிடி மற்றும் குடிசைக் கைத்தொழில் உட்பட) ஈடுபட்டுள்ள தொழிலாளருக்கான தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறிக்கு அனுமதி பெறுவதற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன,

விண்ணப்பப் படிவத்தையும் மேலதிக விபரங்களையும் பல்கலைக்கழக சிறாப்பரின் கருமபீடத்தில் ரூபா 15/- செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை நேரில் சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 15/-க்கான காசுக்கட்டளையுடன் சுயவிலாசமிடப்பட்டதும், முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ. மீx10 செ மீ அளவினதான கடித மேலுறையுடன் உதவிப்பதிவாளர்/ தேர்வுகளும் அனுமதிகளும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் ஏற்பதற்கான கடைசித் திகதி:- 30.06.1993.

பாடநெறியிற் பங்குபற்றுவோர் எழுத்துத் தேர்வு மூலமாகவும், நேர்முகத் தேர்வு மூலமாகவும் தெரிவு செய்யப்படுவர்.

எழுத்துத் தேர்வு 08 08.1993 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00மணிக்கு நடைபெறும்.

குறிப்பு:-

பத்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவம் உடையவர்களிமிருந்து ஆண்டு 9இலும் குறைவான கல்வித்தகைமையுடனும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பதிவாளர்.
(சி/6644)

கல்லூரி சாதாரண / உயர்தர மாணவர்களுக்கான

## விஞ்ஞானக் கண்காட்சி

(இரசாயன, பௌதிக, கணனி, தாவர, விலங்கியல் துறைகளில்)

**இடம்:** யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடம்

**காலம்:** 24 5 93 - 26 5 93 (மாணவர்களுக்குமாத்திரம்)
27 5 93 - 28 5 93 (பொதுமக்களுக்கு)

**நேரம்:** மு.ப 9.00மணிதொடக்கம் பி.ப.3.00மணிவரை

கல்லூரி மாணவர்கள் வரவிரும்பும் காலநேரத்தினை எம்முடன் முன்கூட்டியே பதிவுசெய்வது அவசியம்.

[சி-6645] விஞ்ஞான பீடாதிபதி
யாழ். பல்கலைக்கழகம்

## நினைவு கூருகின்றோம் ... 1993-05-19

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் இயக்கச்சியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

றேடியோ வேக்ஸ், 284, ஆரிய குளம் சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-6633)

**Your Watches & Radios?**

Repairs of Watc es&Radios Guaranteed DII KA WATCH& RADIO WORKS, 284 S anley Road, Ariyakulam Junction, Jatfna Branch: Kandy Road, Chavakachcheri.

(சி-6608)


## தளபதி நியமனம் ரி.வி. நிலையம் சேதம்

(பரமாஸியோ)

சூரினாமில் புதிதாக இராணுவத்தளபதி ஒருவர் நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்து அந்நாட்டின் தொலைக்காட்சி நிலையம் 5 ஆயுதபாணிகளால் அடித்து நொருக்கப்பட்டது.

நள்ளிரவுக்கு பின்பாக நுழைந்த இவர்கள் கருவிகளை நாசமாக்கினர். பணியில் இருந்த மூன்று ஊழியர்களையும் தாக்கிவிட்டு கட்டடத்திற்கும் தீவைத்தனர். இதுவரை இத்தாக்குதலுக்கு எவரும் உரிமை கோரவில்லை.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**கலை / வர்த்தகம் / முகாமைத்துவம்**

**1 ம், 2-ம், 3-ம், 4-ம் கல்வியாண்டு – ஆண்டு இறுதிப் பரீட்சை – 1992**

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதி வாய்ந்த சகல வருட மாணவர்களும் 31-05-93 இற்கு முன்பாக யாழ் பல்கலைக் கழகம், பரீட்சைக் கிளையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். மீள் பரீட்சார்த்திகள் தகுந்தகட்டண பற்றுச் சீட்டுடன் தமது விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும். இக் குறிப்பிட்ட திகதிக்கு பின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

—பதிவாளர்

(சி-6643)

## வீரவேங்கை இன்பன்

[கணேசபிள்ளை துஷ்யந்தன் (கண்ணன்)]


திதி: 19-05-93

வாழ்வின் அர்த்தத்தை
இரத்தத்தால் எழுதிச் சென்றவனே
தமிழீழ மெங்கும் புகழுடன்
வாழும் உன் பெயர்.

நிராகரன் வதி,
கோப்பாய் வடக்கு, (4901)

குடும்பத்தினர்,
நண்பர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**கப்டன் காண்ஸ் (வாகீசன்)**

(தவராஜசிங்கம் குலசேகரன்)

வீரப் பிறப்பு : 15-11-1973 வீரச்சாவு: 19-04-1993

தமிழீழ தேசத்தின் இருள் நீக்க
உயர்ந்திட்ட கரங்களில் ஓர் காம்
அண்ணன் மதுவனை களத்தினில் இழந்தவன்
தந்தையை இந்தியால் இழந்தவன்
பலகளம் வென்றுமே நின்றவன்
விடுதலைப் பயிருக்கு உரமாக ஆனவன்.

கச்சாய் வீதி, சாவகச்சேரி

-குடும்பத்தினர்

(4909)



செல்வி

## விஜயரூபா திருநாவுக்கரசு

(முன்னாள் கதிரேசன் 'குமார' மகாவித்தியாலய ஆசிரியையும், யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவியும்)

ரோஜா மலர்ந்தது: 04. 08. 1969

ரோஜா மடிந்தது: 19. 03. 1993

அன்பின் பிறப்பிடமே!
பாசத்தின் தங்கையே!
நேசத்திற்குரிய அக்காவே!
காங்கேசன்துறையில் பிறந்தாய்
ஈழத்தில் மறைந்து விட்டாய்
பல்கலையும் கற்று
பட்டங்கள் பல பெற்று
வாழ்வாய் என்றிருந்தோம்.
ஆனால் நீ மறைந்தாய் - உன்
ஆசைகள் இம்மண்ணில் நிறைவெய்தும்
அது வரையில் எம் இதயத்தில் நீ வாழ்வாய்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பாலாவோடை,
உடுவில் தெற்கு,
மானிப்பாய்.

சகோதரர் குமார், கணேஸ்
சகோதரி விமலா.

[சி-6642]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் : 09 – 01 – 1918



மறைவு : 29 – 05 – 1992

அமரர் **திரு. சுப்பிரமணியம் நல்லையா** அவர்கள்

புளியங்கூடல்

திதி: திரயோதசி, 19-05-1993

ஏயும் ஆங்கிரச எழிலாரும் வைகாசி
தேயும் திரயோதசித் திருநாள் - சேயன்
நல்லையா சென்றடைந்தான் நம்பன் திருவடியை
எல்லையில் இன்பம் திளைத்து.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்

109/3 ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம். (4872)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இடம் : யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடம்

காலம்: 24 5 93 - 26 5 93 (மாணவர்களுக்குமாத்திரம்)
27 5 93 - 28 5 93 (பொதுமக்களுக்கு)

நேரம்: மு.ப 9.00மணிதொடக்கம் பி.ப.3.00மணிவரை

கல்லூரி மாணவர்கள் வரவிரும்பும் காலநேரத்தினை எம்முடன் முன்கூட்டியே பதிவுசெய்வது அவசியம்.

[சி-6645]

விஞ்ஞான பீடாதிபதி
யாழ், பல்கலைக்கழகம்

## நினைவு கூருகின்றோம் ... 1993-05-19

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் இயக்கச்சியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**அகிலன்** (சின்னத்துரை சிவபாலன் - ஆறுமுகத்தான் புதுக்குளம், ஓமந்தை - வவுனியா)

இதே ஆண்டு வீரச்சாவெய்திய-

★ **சண்முகம் நாகராசா** (முறக்கொட்டாஞ்சேனை - மட்டு.)

1988ஆம் ஆண்டு கள்ளியங்காட்டில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**மோகன்** (க. மோகனதாஸ் - பழுகாமம் - மட்டு.)

மதவாச்சியில் பாரவண்டியொன்றினை வழிமறித்து கொள்ளையில் ஈடுபட்ட சிறிலங்கா இராணுவத்தினரால் வண்டியுடன் தீ மூட்டிக் கொல்லப்பட்ட சாரதி மற்றும் ஊழியர்களான 03 தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு வவுனியா - கோழியாகுளம் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**கப்டன் மணியம்** (இராஜேந்திரம் வேதநாயகம் - புதுக்குடியிருப்பு -முல்லைத்தீவு)

உரும்பராயில் இந்தியப்படையினரால் சடலமாக ஒப்படைக்கப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1992ஆம் ஆண்டு மட்டு- பாலம் போட்ட மடுப்பகுதியில் சிறிலங்கா ராணுவம் மற்றும் தேசவிரோத சக்திகள் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய-

**ரவிச்சந்திரன்** (தருமரட்ணம் ராஜ்குமார்-செங்கலடி- மட்டு.)

மட்டுநகரை சுற்றிவளைத்துத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட சிறிலங்கா இராணுவத்தினரால் உன்னிச்சைப் பகுதியில் 03 இளைஞர்கள், களுவாஞ்சிக்குடியில் 2 இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்ட,

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6641)

நல்லூர் இள நூலகம் மன்றம் யாழ்ப்பாணம்

# ஒரே பார்வையில் மாவட்ட ரீதியான மாகாணசபை தேர்தல் முடிவுகள்

| மாவட்டம் | மொத்தம் | பதிவாகிய வாக்குகள் | ஐ.தே.க. | பெ. ஆச. | ம.ஐ.மு. | பெ. ஆச. | ஜ ஐ.தே மு | பெ. ஆச. | மு. கா. | பெ. ஆச, | ந.ச.ச.க. | பெ. ஆச. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 12,58,586 | 8,53,847 | 3, 03,179 | 16 | 3,07,471 | 17 | 1,76,691 | 10 | 4,854 | — | 6,983 | — |
| கம்பஹா | 11,17,073 | 8,17,825 | 3,20,065 | 15 | 3,53,602 | 17 | 88,362 | 04 | 7,078 | — | 4,815 | — |
| களுத்துறை | 6,39,275 | 4,66,450 | 1,92,269 | 10 | 1,71,451 | 09 | 59,864 | 03 | 6,398 | 01 | 3,704 | — |
| கண்டி | 7,19,288 | 5,52,078 | 2,52,326 | 14 | 1,55,298 | 09 | 90,366 | 05 | 6,079 | — | 3,382 | — |
| மாத்தளை | 19,32,278 | 1,73,666 | 92,894 | 06 | 45,097 | 03 | 30,238 | 02 | 4,119 | — | 1,318 | — |
| நுவரெலியா | 30,67,189 | 2,89,563 | 1,50,936 | 10 | 47,823 | 03 | 29,183 | 02 | — | — | 1,376 | — |
| காலி | 6,22,134 | 4.57,687 | 1,90,478 | 10 | 1,89,114 | 10 | 39,036 | 02 | — | — | 5,335 | — |
| மாத்தறை | 4,94,078 | 3,45,464 | 1,45,093 | 08 | 1,29,693 | 07 | 44.873 | 02 | — | — | — | — |
| அம்பாந்தோட்டை | 3,23,647 | 2,24,089 | 1,07,841 | 07 | 63,919 | 05 | 32,882 | 02 | — | — | 1,889 | — |
| குருநாகல் | 8,58,638 | 6,63,202 | 2,69,771 | 15 | 2,21,896 | 13 | 1,17,893 | 07 | 4,197 | — | 5,117 | — |
| அநுராதபுரம் | 3,98,137 | 56,646 | 1,46,152 | 13 | 98,902 | 07 | 29,782 | 02 | 5,006 | 01 | 1,982 | — |
| பொலநறுவை | 1,96,031 | 1,45,812 | 69,606 | 05 | 44,528 | 04 | 16,608 | 01 | 1,818 | — | 622 | — |
| பதுளை | 4,33,862 | 3,43,434 | 1,75,535 | 11 | 77,422 | 05 | 40,177 | 03 | 4,864 | — | 2,553 | — |
| மொனராகலை | 2,00,601 | 1,56,850 | 79,400 | 07 | 49,795 | 05 | 12,613 | 01 | — | — | 846 | — |
| இரத்தினபுரி | 5,46,992 | 4,34,424 | 2,11,097 | 12 | 1,47,586 | 08 | 34,850 | 02 | — | — | 10,476 | 01 |
| கேகாலை | 4,94,746 | 3,66,508 | 1,67,968 | 10 | 1,10,798 | 06 | 57,869 | 05 | — | — | — | — |
| புத்தளம் | 3,46,590 | 2,47,546 | 1,21,499 | 08 | 87,887 | 05 | 25.897 | 02 | — | — | — | — |

### சிந்தனைக்கு

பித்தர்களால் நடத்தப்படும் பைத்தியங்கள் விடுதியாகி வருகிறது உலகம்.

— லாய்ட் ஜார்ஜ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 19-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## குட்டையை குழப்பிய தேர்தல் முடிவுகள்

இரண்டாவது மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் பெரும்பாலும் வெளிவந்த நிலையில் தென்னிலங்கையில் ஒரு ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலை தோன்றியுள்ளதைத் தெளிவாக அவதானிக்க முடிகின்றது.

தேர்தல் இடம்பெற்ற ஏழு மாகாணங்களில் ஐக்கிய தேசியக் கட்சி நான்கு மாகாணங்களில் அறுதிப் பெரும் பான்மை பெற்றுள்ள போதும், முக்கிய மாகாணங்களான மேல், தென், வடமேல் மாகாணங்களில், அறுதிப் பெரும்பான்மையை பெறத் தவறிவிட்டது. இந் நிலையானது ஆட்சியிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியை பெரிதும் பாதித்துள்ளது என்பதை எவரும் மறுக்கமுடியாது.

தேர்தல் முடிவுகளைப் பொறுத்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெளியில் கூறிக் கொண்டதைப் போல் வெற்றிபெற முடியா விட்டாலும் 1977-ம் ஆண்டிற்குப் பின்னர் குறிப்பிடக் கூடிய அனுகூலத்தைப் பெற்றுள்ளது என்றே கூறலாம். இதில், மேல் மாகாணத்தில் சுதந்திரக்கட்சி பெற்றுள்ள குறிப்பிடக் கூடிய வெற்றியானது ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்து பெரும் நெருக்கடிக்குரியதாகவே இருக்கும்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினைப் பொறுத்து இத்தேர்தல் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை. ஆயினும் மூன்று மாகாணங்களிலும் யார் ஆட்சி அமைப்பது என்பதைத் தீர்மானிக்கும் சக்தியாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உள்ளது ஐக்கிய தேசியக் கட்சியாயினும் சரி, சுதந்திரக் கட்சியாயினும் சரி ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஆதரவு ஆட்சி அமைப்பதற்கு முக்கியமான தொன்றாகவே உள்ளது. அதாவது ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினைப் புறம்தள்ளி இம் மாகாணங்களில் எவரும் ஆட்சி அமைக்கமுடியாத நிலை உருவாகியுள்ளது.

சிறிலங்காவில் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்பார்த்த வெற்றி கிடைக்காமைக்கு பதினைந்து வருட ஆட்சியில் சிங்கள மக்களுக்கு ஏற்பட்டுள்ள வெறுப்பு முக்கியமான காரணம் எனலாம். இதற்கு தென்னிலங்கையில் திரு. பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த படுகொலைகளும் பெரும்பங்கு ஆற்றியுள்ளது எனலாம். ஆனால், பிரேமதாசாவின்

## ஏயார் லங்காவிலிருந்து பாஸ்கரலிங்கம் ராஜினாமா

ஏயார்லங்கா நிறுவனப் பணிப்பாளர் சபையின் புதிய தலைவராக லண்டனில் இருக்கும் சிறிலங்காத் தூதுவர் ஜெனரல் சேபால ஆட்டிகல பொறுப்பேற்கவுள்ளார். அதிகாரப் பூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெளியிடப்பட்டிருக்கும் செய்தியில் மேலும் கடந்த வெள்ளியன்று கூடிய ஏயார்லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் சபை ராஜினாமாச் செய்திருப்பது தெரிந்ததே.

ஏயார்லங்கா பணிப்பாளர் சபையிலிருந்து ராஜினாமாச் செய்திருப்போர் விபரம் வருமாறு. ஜஸ்டின் ஜெயவர்த்தனா, ஆர். பாஸ்கரலிங்கம், றொகான் ஜெயக்கொடி, கோகுல விஜியதிலக, எஸ். தனபால

## போராட்டத்தில் இணைய மகனை ஒப்படைத்தார்

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த பூபாலசிங்கம் என்பவர் தனது மகனான பூலோகராசா என்பவரை நேற்று முன்தினம் வல்வெட்டித்துறையில் இருக்கும் கடற்புலிகளின் அரசியல் துறைச் செயலகத்தில் வைத்து மகள் லுமினாவை கடற்புலிகளின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் போராட்டத்தில் இணைத்துக் கொள்வதற்காக கையளித்துள்ளார்.

## மெய்வல்லுநர்போட்டி

(தொல்புரம்)

சுழிபுரம் கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் கொத்தணி அதிபர் திரு. கா. சந்திரபாலன் தலைமையில் நடைபெற்றது.

இவ் வைபவத்திற்கு பண்டத்தரிப்பு கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

மேலும் இப் போட்டிகளில் விக்ரோறியாக் கல்லூரி மாணவர்கள் கூடுதலான இடங்களைப் பெற்று கோட்ட மட்டத்திலான போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (41)

## தமிழ் குரும்ப உறுப்பினர்

இஸ்லாமிய நாடுகளுக்கிடையில்

## தொலைத்தொடர்புகளுக்கு எகிப்து தடைவிதிப்பு

(கெய்ரோ)

எகிப்திலிருந்து பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான். சூடான் ஈரான் மற்றும் ஈராக் நாடுகளுடன் மேற்கொள்ளப்படும் நேரடித் தொலைபேசித் தொடர்புகளுக்கு எகிப்து அரசு தடை விதித்துள்ளது.

இந்த ஐந்து நாடுகளிலும் இருக்கும் இஸ்லாமிய அடிப்படை வாதிகள், வன்முறை வாதிகளுக்கு அந்நாட்டு அரசுகள் ஊக்கமளித்து வருவதாக எகிப்திய அதிபர் கொஸ்னி முபாரக் கூறியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## பிறப்புச் சான்றிதழ் வழங்க நடவடிக்கை

பருத்தித்துறை பெரும்பகுதி பதிவுகாரர் காரியாலயத்தில் தற்போது ஆளுக்கொரு பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப் பட்டு வருகின்றன.

பிறப்புச் சான்றிதழ்கள் எழுதும் படிவங்கள் போதியளவு இல்லாததினால் கட்டுப் பாடான முறையிலேயே வழ

மாணிக்கவாசகர் எடுத்துக் கொண்ட துரித முயற்சியினால் இவ்வலுவலகத்திற்கு நான்கு புத்தகங்கள் கிடைக்கப் பெற்றதையடுத்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

1954 ஆம்ஆண்டுக்குமுன்பும் பின்பும் பிறந்தவர்களுக்கு தற்

பொறுத்து இத்தேர்தல் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை. ஆயினும் மூன்று மாகாணங்களிலும் யார் ஆட்சி அமைப்பது என்பதைத் தீர்மானிக்கும் சக்தியாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உள்ளது ஐக்கிய தேசியக் கட்சியாயினும் சரி, சுதந்திரக் கட்சியாயினும் சரி ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஆதரவு ஆட்சி அமைப்பதற்கு முக்கியமான தொன்றாகவே உள்ளது. அதாவது ஜனந'யக ஐக்கிய தேசிய முன்னணியினைப் புறம்தள்ளி இம் மாகாணங்களில் எவரும் ஆட்சி அமைக்கமுடியாத நிலை உருவாகியுள்ளது.

சிறிலங்காவில் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்பார்த்த வெற்றி கிடைக்காமைக்கு பதினைந்து வருட ஆட்சியில் சிங்கள மக்களுக்கு ஏற்பட்டுள்ள வெறுப்பு முக்கியமான காரணம் எனலாம். இதற்கு தென்னிலங்கையில் திரு. பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த படுகொலைகளும் பெரும்பங்கு ஆற்றியுள்ளது எனலாம். ஆனால், பிரேமதாசாவின் மரணம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தேர்தலில் சாதகமாக அமைந்ததா, பாதகமாக அமைந்ததா என்பது குறித்து மதிப்பீடு செய்தல் கடினமானதே ஆகும். ஏனெனில் பிரேமதாசாவின் மரணம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக இருந்த வெறுப்பை ஓரளவு குறைத்தது என்றே கூறலாம். மாறாக பிரேமதாசாவின் மரணம் அனுதாப அலை ஒன்றை ஏற்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சிக்கு அனுதாப வாக்குகளைப் பெற்றுக் கொடுத்ததா என்பது கேள்விக்குரியதே. இதேவேளை ஐக்கிய தேசிய கட்சி இலங்கை தொழிலாளர் காங்கிரசுடன் செய்து கொண்ட தேர்தல் உடன்பாடு மத்திய, ஊவா, சப்பிரகமுவா, மேல், மாகாணங்களில் அக்கட்சிக்குப் பெரும் சாதகமாக அமைந்திருந்தது.

இதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்து இத்தேர்தலில் வழிவந்த மரபுரீதியான தலைமையைக் கொண்டிருந்த ஒரே கட்சியாக இக்கட்சியே இருந்தது. ஆனால், இக்கட்சியினுள் காணப்பட்ட உட்கட்சி முரண்பாடானது மக்களை சுதந்திரக்கட்சி மீது பெரிதும் நம்பிக்கை கொள்ள வைக்கவில்லை. சுதந்திரக் கட்சியினுள் இருந்த தாய்-மகள்-மகன் முரண்பாடின்றி கட்சி ஒற்றுமையாக இருந்திருப்பின், பெரும் வெற்றி வாய்ப்பை கட்சி பெற்றிருக்கக்கூடும்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைப் பொறுத்து இத்தேர்தல் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்காமைக்கு அக்கட்சியின் தலைமைத்துவத்தில் ஏற்பட்ட வெற்றிடமே முக்கிய காரணமாகும். சிங்கள புத்திஜீவிகளுக்கும், மத்தியதரவர்க்கத்திற்கும்தலைமைத்துவம்கொடுக்க முற்பட்ட லலித்தின் மரணம் கட்சிக்கு அனுதாப அலையை ஏற்படுத்திய தாயினும், கட்சியில் அவருக்கடுத்து உள்ள தலைமை இடைவெளியை ஈடுசெய்யக் கூடியதாக வாக்காளர் கருதாமையே அக்கட்சி எதிர்பார்த்த வெற்றியைப்பெற முடியாமைக்குக் காரணமாகும். மேலும் பிரேமதாசாவின் மரணமும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி மீதிருந்த அனுதாபத்தை குறைத்தது என்றே கூறலாம்.

ஒட்டுமொத்தமாக, மாகாணசபைத் தேர்தலானது. தென்னிலங்கை அரசியலை பெரிதும் தடுமாற்றத்திற்கு உள்ளாக்கியுள்ளது என்று கூறின்அது மிகையானதல்ல. குறிப்பாக 1977 இல் இருந்து ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய ஒரு ஸ்திரமான/ எதேச்சதிகார ஆட்சிக்கு பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளதெனலாம். அதாவது, ஐக்கிய தேசியக்கட்சி தானே வகுத்த தேர்தல் சட்டத்திற்குள் தானே சிக்கிக் கொண்டது என்பதே சரியானது.

ஏயார்லங்கா நிறுவனப் பணிப்பாளர் சபையின் புதிய தலைவராக லண்டனில் இருக்கும் சிறிலங்காத் தூதுவர் ஜெனரல் சேபால ஆட்டிகல பொறுப்பேற்கவுள்ளார். அதிகாரப் பூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெளியிடப்பட்டிருக்கும் செய்தியில் மேலும் கடந்த வெள்ளியன்று கூடிய ஏயார்லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் சபை ராஜினாமாச் செய்திருப்பது தெரிந்ததே.

ஏயார்லங்கா பணிப்பாளர் சபையிலிருந்து ராஜினாமாச் செய்திருப்போர் விபரம் வருமாறு. ஜஸ்டின் ஜெயவர்த்தனா, ஆர். பாஸ்கரலிங்கம், றொகான் ஜெயக்கொடி, கோகுல விஜியதிலக, எஸ். தனபால

## போராட்டத்தில் இணைய மகனை ஒப்படைத்தார்

வல்வெட்டித்துறை ஆதி கோவிலடியைச் சேர்ந்த பூபாலசிங்கம் என்பவர் தனது மகனான பூலோகராசா என்பவரை நேற்று முன்தினம் வல்வெட்டித்துறையில் இருக்கும் கடற்புலிகளின் அரசியல் துறைச் செயலகத்தில் வைத்து போராட்டத்தில் இணைத்துக் கொள்வதற்காக கையளித்தார்.

அவர் அங்கு கூறுகையில், தான் நாட்டுக்கு செய்ய முடியாமற் போன சேவையை செய்ய எனது மகன் முன் வந்துள்ளார். எனவேபெற்றோராகிய எமது பூரண விருப்பத்துடன் என் மகனை போராட்டத்தில் இணைக்கின்றேன் என்றார்.

இதேவேளை திருமதி ராஜேஸ்வரி திருச்செல்வம் என்பவர் 18 வயதான தமது மகள் லுமினாவை கடற்புலிகளின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் போராட்டத்தில் இணைத்துக் கொள்வதற்காக கையளித்துள்ளார்.

## தமிழ் குடும்ப உறுப்பினர் இராணுவத்தால் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கொண்டையன் கேணி என்ற கிராமத்தில் தமிழ்க் குடும்பம் ஒன்றை சிறிலங்கா இராணுவத்தினரும் இராணுவ உளவுப் பிரிவினரும் இணைந்து கைது செய்துள்ளனர்.

கடந்த 13 ஆம் திகதி வாழைச்சேனை இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய சிறிலங்காப் படையினர் மேற்படி கிராமத்திற்குள் நுழைந்து வீடொன்றைச் சுற்றிவளைத்து வேலாயுதம் பிள்ளை சந்திரன் என்பவரையும் இவரது மனைவியான ரதி என்பவரையும் மேலும் இவர்களது இரு பிள்ளைகளையும் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். இதன்பின்னர் இவர்கள் உலங்குவானூர்தி மூலம் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அண்மையில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் கொத்தணி அதிபர் திரு. கா. சந்திரபாலன் தலைமையில் நடைபெற்றது.

இவ் வைபவத்திற்கு பண்டத்தரிப்பு கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

மேலும் இப் போட்டிகளில் விக்ரோறியாக் கல்லூரி மாணவர்கள் கூடுதலான இடங்களைப் பெற்று கோட்ட மட்டத்திலான போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (41)

## எகிப்து தடைவிதிப்பு

(கெய்ரோ)

எகிப்திலிருந்து பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான். சூடான் ஈரான் மற்றும் ஈராக் நாடுகளுடன் மேற்கொள்ளப்படும் நேரடித் தொலைபேசித் தொடர்புகளுக்கு எகிப்து அரசு தடை விதித்துள்ளது.

இந்த ஐந்து நாடுகளிலும் இருக்கும் இஸ்லாமிய அடிப்படை வாதிகள், வன்முறை வாதிகளுக்கு அந்நாட்டு அரசுகள் ஊக்கமளித்து வருவதாக எகிப்திய அதிபர் கொஸ்னி முபாரக் கூறியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## பிறப்புச் சான்றிதழ் வழங்க நடவடிக்கை

பருத்தித்துறை பெரும்பகுதி பதிவுகாரர் காரியாலயத்தில் தற்போது ஆளுக்கொரு பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

பிறப்புச் சான்றிதழ்கள் எழுதும் படிவங்கள் போதியளவு இல்லாததினால் கட்டுப்பாடான முறையிலேயே வழங்கப்பட்டு வந்தன. தற்போது பருத்தித்துறை பெரும்பாக உத்தியோகத்தர் திரு க. மாணிக்கவாசகர் எடுத்துக் கொண்ட துரித முயற்சியினால் இவ்வலுவலகத்திற்கு நான்கு புத்தகங்கள் கிடைக்கப் பெற்றதையடுத்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

1954 ஆம்ஆண்டுக்குமுன்பும் பின்பும் பிறந்தவர்களுக்கு தற்போது ஆளுக்கொரு பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (யோ)

## கணக்கு விபரங்கள் கோரப்பட்டன

1991, 1992 ஆம் ஆண்டு காலத்தில் மேலதிக நேர வேலைக்கும், பொது விடுமுறை தின வேலைக்காகவும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் பற்றிய விபரத்தையும் என்ன வேலை செய்வதற்காக இவை வழங்கப்பட்டுள்ளன என்பது பற்றிய விபரங்களையும் தமக்கு சமர்ப்பிக்குமாறு யாழ். செயலக உதவி கணக்காய்வாளர் காரியாலயம் சகல யாழ். கோட்ட பிராந்திய கல்வித் திணைக்களங்களுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்களையும் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

அத்துடன் 1991-ல் இருந்து 1993 வரை நியமிக்கப்பட்ட அமைய ஊழியர் தொடர்பான அனுமதிகள் பற்றிய விபரங்களையும், மார்கழி 1992 வரை புனர்நிர்மாண வேலை தொடர்பாக வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் பற்றிய விபரங்களையும் இத்துடன் சமர்ப்பிக்குமாறும் அவர் மேலும் இக் கடிதத்தில் கேட்டுள்ளார். (17)

## தமிழ்மொழி தினம்

தமிழ் மொழித்தினம் (ஆ) போட்டிகள் நடாத்தப்படவுள்ளன. இவற்றுக்காக கொத்தணி மட்டப் போட்டிகள் எதிர்வரும் வாரம் முதல் ஆரம்பமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் கோட்டமட்டங்களிலும் மாவட்ட மட்டங்களிலும் இப்போட்டிகள் நடைபெறும்.

### அப்பியாச கொப்பி வழங்கல்

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் புங்குடுதீவு அமெரிக்கன் மிஷன் வித்தியாலயம், துரைச்சாமி வித்தியாலயம் இராஜராஜேஸ்வரி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வியிலும் வறுமைக் கோட்டிற்கும் கீழ்பட்ட மாணவர்களுக்கு புங்குடுதீவு,நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் இலவசமாக அப்பியாசக் கொப்பிகளை வழங்கியுள்ளது. (42)

## சந்தை விலை விபரம் (17-05-1993)

### யாழ். மாவட்ட சராசரி சில்லறை விலைகள்

| தொ. இல. | பொருள்கள் | அலகு | திருநெல்வேலி | பெரிய கடை | சுன்னாகம் | அச்சுவேலி | சங்கானை | நெல்லியடி | பருத்தித்துறை | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 01. | குத்தரிசி | கி.கி | 29.50 | 27.80 | 30.30 | 29.80 | 30.35 | 30.00 | 29.00 | 31.30 |
| 02. | கோதுமை மா | '' | 13.00 | 13.15 | 13.30 | 14.00 | 13.00 | 13.00 | 13.30 | 13.50 |
| 03. | சீனி | '' | 43.00 | 44.65 | 43.65 | 50.00 | 43.65 | 41.00 | 46.65 | 46.00 |
| 04. | கத்தரி | '' | 19.65 | 33.65 | 19.30 | 26.00 | 19.30 | 15.67 | 23.30 | 20.00 |
| 05. | வெண்டி | '' | 20.30 | 29.65 | 14.30 | 22.30 | 14.00 | 24.30 | 22.00 | 26.00 |
| 06. | பாகல் | '' | 35.00 | 53.65 | 26.00 | 33.00 | 35.00 | 15.00 | 38.30 | 32.65 |
| 07. | புடோல் | '' | 19.00 | 26.65 | 19.00 | 23.30 | 38.30 | 12.00 | 20.30 | 13.50 |
| 08. | பயற்றங்காய் | '' | 27.65 | 34.65 | 23.30 | 30.65 | 19 30 | 24.00 | 29.30 | 23.65 |
| 09. | தக்காளி | '' | 40 00 | 65.30 | 43.30 | — | 31.30 | 60.00 | 52.65 | — |
| 10. | வாழைக்காய் | '' | 19.00 | 27.65 | 20.65 | 24.30 | 36.00 | 22.00 | 24 00 | 23.00 |
| 11. | பீற்றூட் | '' | 20.65 | 26.30 | 18.65 | 24.00 | 17-50 | 20.00 | 18.00 | — |
| 12. | தேங்காய் | ஒன்று | 18.00 | 21.00 | 18.30 | 21.00 | 19.80 | 18.50 | 19.00 | 11.15 |
| 13. | பச்சைமிளகாய் | கி.கி | 95.00 | 95.30 | 76.65 | 113 30 | 103.30 | 90.00 | 86.65 | 85.00 |
| 14. | எலுமிச்சை | '' | 173.00 | 240.00 | 280.00 | 195.30 | 190.00 | 162.50 | 210.00 | 180.00 |
| 15. | வெங்காயம் | '' | 19.50 | 27.65 | 19.30 | 19.00 | 19.60 | 24.00 | 24.30 | 26.50 |
| 16. | கப்பல் வாழைப்பழம் | '' | 29.00 | 35.30 | 30.00 | 31.30 | 30.00 | 40.00 | 30.00 | 30 00 |
| 17. | இறால் | '' | 130.00 | 103.30 | 93.30 | 71 65 | 106.65 | 100.00 | 93.00 | 90.00 |
| 18. | பெரியமீன் | '' | 190.00 | 170.00 | 180.00 | 138.00 | 163.00 | 125.00 | 200.00 | — |
| 19. | சிறியமீன் | '' | 170.00 | 85.00 | 140.00 | 85.00 | 98.00 | 50.00 | 75.00 | 40.00 |
| 20. | முட்டை | ஒன்று | 8.50 | 8.80 | 7.30 | 8.25 | 8.00 | 7.50 | 7.60 | 7.00 |

தகவல்- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

ஈழநாதம்

# மர்மமான நரம்பு நோய் கியூபாவில் பரவுகிறது

[ஹவானா]
நரம்புப் பகுதியைத் தாக்கி கண்பார்வையை மங்கச் செய்யும் மர்மநோய் தொடர்ந்து கியூபாவில் பரவி வருகிறது. இதுவரைசுமார் 26,000கியூபா மக்கள் இந்நோயின் தாககுதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

வார இறுதியில் நாட்டின் வானொலியில் மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி பிடல் காஸ்ரோ, நோயைக் கண்டுபிடித்து குணமாக்க சுகாதார அதிகாரிகள் தமது முழுச் சக்தியையும் பயன்படுத்தி உழைத்துவருகின்றனர் எனக் குறிப்பிட்டார்.

இதேசமயம் இந்நோய்பற்றி கண்டறிய சர்வதேச வைத்தியர் குழுவொன்று கியூபா வந்தடைந்துள்ளது. இவர்களில் கண்நோய் நிபுணர், ஊட்டச் சத்துக்கள் தொடர்பான ஆய்வாளர் ஆகியோர் அடங்குவர். கியூபா சுகாதார அமைச்சின் வேண்டுகோளை அடுத்து இவர்கள் இங்கு வந்துள்ளனர்.

பூர்வாங்க வைத்திய ஆய்வுகளின்படி ஒப்ரிக் நியூரைற்றிஸ் நோயே காரணம் என்றும் இது கண்நோய்களை ஏற்படுத்தும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. இது நரம்பு மண்டலத்தையும் தாக்கலாம் என கியூபா வைத்தியர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

கியூபாவில் உணவு மற்றும் மருந்து பொருள்களுக்கு இப்போது பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. ரஷ்யாவிலிருந்து இறக்குமதியைக் குறைத்ததும் அமெரிக்காவின் இறுக்கமான தடைகளும் இதற்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

## 1984இற்கு பின் ரஷ்யா வீட்டோ பயன்படுத்தியது

(வாஷிங்டன்)
1984ஆம் ஆண்டிற்கு பின்னர் ரஷ்யா ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தனது வீட்டோ ரத்து அதிகாரத்தை பயன்படுத்தி உறுப்பினர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. சைப்பிரசில் அமைதிப்பணியில் ஈடுபட்டுள்ள ஐ. நா. அமைதிப் படைக்கு நிதியுதவி குறித்து பிரிட்டன் கொண்டு வந்த தீர்மானத்தையே ரஷ்யா ரத்து செய்தது.

பிரிட்டனின் தீர்மானத்திற்கு ஆதரவாக எல்லா 14 பாதுகாப்புச் சபை நாடுகளும் வாக்களித்தன. சைப்பிரசில் 1964 முதல் ஐ.நா. அமைதிப் படை பணியில் ஈடுபட்டு வருகிறது. சைப்பிரசில் உள்ள கிரேக்க மக்களுக்கும். துருக்கி மக்களுக்கும் இடையில்அமைதி காக்கும் வகையில் அங்கு ஐ. நா. படை நிலை கொண்டுள்ளது.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## 1,700 பரல் மண்ணெய்யுடன் நில்கிரி வந்தது

(வடமராட்சி)
நில்கிரி கப்பல் 1,700 பரல் மண்ணெண்ணெயை ஏற்றிக் கொண்டு நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தது. உடனேயே பரல்கள் இறக்கும் வேலைகள் ஆரம்பமாகின. இம் மண்ணெண்ணெயில் 900 பீப்பா தனியாருக்குவந்ததென தெரியவருகிறது. அதே சமயம் 'குமண' கப்பலில் இருந்தும் பொருள்கள் இறக்கும் வேலைகளும் நடைபெற்றன.

நில்கிரிகப்பலில் யாழ் திட்டமிடல் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் மற்றும் நல்லூர் பிரதேச செயலர் திரு. ஆ. மகாலிங்கம் ஆகியோரும் வந்தனர்.

அநேகமாக நில்கிரி கப்பல் இன்று மாலை கொழும்புக்கு புறப்படுமென எதிர்பார்க்கப் படுகிறது. (யோ)

## பரிசளிப்பு

(நெல்லியடி)
தும்பளை தெற்கு திருவள்ளுவர் சனசமூக நிலைய ஆதரவில் இயங்கும் தமிழொலி மாணவர் மன்ற 2வது ஆண்டு விழாவும் பரிசளிப்பும் கடந்த 28ஆம் திகதி இரவு திரு. ந. நடராசா தலைமையில் நடைபெற்றது. (30)

## கலிபர் தாக்குதல்

(தொல்புரம்)
தீவகப் பகுதி கரையோர காவல் நிலைகளில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த ஞாயிறு காலை 5.50 மணியளவில் பொன்னாலை கடற்பரப்பில் மீன்பிடியில்ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர். இத் தாக்குதல் சம்பவத்தினால் தொழில்களைக்கைவிட்டு மீனவர்கள் கரைசேர்ந்தனர். (41)

## இந்திய - இஸ்ரேல் உறவு பலம் பெறுகிறது

[டில்லி]
இந்தியாவுக்கும் இஸ்ரவேலுக்குமிடையில் உறை நிலையில் இருந்த உறவு இஸ்ரவேலின் வெளியுறவு அமைச்சரின் இந்திய விஜயத்தைத் தொடர்ந்து புத்துயிர் பெற்றுள்ளது என பி. பி. ஸி. தெரிவித்தது.

இதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்குமிடையே பல்வேறு துறைசார்ந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன.

இஸ்ரவேல் வெளியுறவு அமைச்சர், இந்தியப் பிரதமர் மற்றும் குடியரசுத் தலைவர் ஆகியோரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். இவற்றைவிட பல அமைச்சர்களையும் இவர் சந்

இந்தியாவின் அணிசாரா நிலைஇந்திய-சோவியத்உறவு, அமெரிக்கா மீதான அவநம்பிக்கை போன்ற காரணங்களால் இவ் இரு நாடுகளுக்குமிடையில் உறவுகள் வலுவடையவில்லை.

தற்போது அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும்இடையில் உருவாகிவரும் உறவு நிலையைத் தொடர்ந்து இஸ்ரவேலுச்கும் இந்தியாவுக்குமிடையிலும் ராஜீக உறவுகள் வலுவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறதுஎன மேலும் அது தெரிவிக்கிறது.

எனினும் சற்று எச்சரிக்கையுடனேயேஇந்திய இந்த உறவில் ஈடுபட்டுள்ளது இந்தியாவில் வாழும் 100 மில்லியன்

## மாரடைப்பால் மரணம்

(யாழ்ப்பாணம்)
யாழ். போதனா வைத்தியசாலையில் 7ஆம் வார்ட்டில் கடமையாற்றிக்கொண்டிருந்த ஆண்தாதி ஒருவர் திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் மரணமடைந்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் தனது கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த யோசேப் என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார். இவருக்குமாரடைப்பு ஏற்பட்டவுடன் உடனடியாக தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு எடுத்து வரப்பட்ட சில நிமிடங்களில் மரணம் சம்பவித்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

## மெய்வல்லுநர் போட்டி

மருதனார்மடம் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் இம் மாதம் 21ஆம், 22ஆம் திகதிகளில் யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. கொத்தணி மட்ட போட்டிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட முதலாம்இடத்தைப் பெற்ற 15,17,19 வயதுஆண், பெண் பிரிவினர் இப் போட்டிகளில் பங்குபற்றுவர்.

21ஆம் திகதி காலை 8.30 மணிககு தெரிவுப் போட்டிகளும், 22ஆம் திகதி பிற்பகல் 1.30மணிக்கு இறுதிப்போட்டிகளும் நடைபெறவுள்ளன.

## சுயதொழிலுக்கு கடன்

(தொல்புரம்)
இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வதியும் வறிய குடும்பங்களுக்கு கட்டுடையில் இயங்கி வரும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் சுயதொழில் வேலை வாய்ப்பு மீளளிப்புக் கடன் வழங்கி வருகின்றது.

சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவைச் சார்ந்த இடம் பெயர்ந்தோர் முகாம்களில் வதியும் தொழிலற்ற வறியவர்களுக்கு சுயதொழில் செய்து குடும்பத்தைக் காப்பாற்றும் பொருட்டு தலா இரண்டாயிரம் ரூபா வீதம் மீளளிப்புக் கடனாக வழங்கப்

யாழ். போதனா வைத்தியசாலையில்
கடமையின்போது காலமான
ரெய் மென்கென்னத் யோசேப் அவர்களின்
நீங்காத நினைவுகள்

பட படப்பான பேச்சும்
பளபளப்பான பார்வையும்
கட கட வென்ற நடையும்
கடமையில் கொண்ட பரிவும்
கடமையில் நின்ற உன்னை
கடுகதியில் கொண்டு செல்ல
காலனும் வந்தானையா
கதிகலங்கி போனோமய்யா
உமக்கு நிகர் நீரே என்று
உங்கள் ஆத்மா சாந்திபெற
தாதியர் நாம் ஒன்று கூடி
வேண்டுகின்றோம் சாந்தி சாந்தி

தாதியர் நலன்புரிச்சங்கம்
போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.

(4914)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வீரப்பிறப்பு: 21 - 06 - 1970



வீரச்சாவு: 30 - 05 - 1992

## லெப்டினன்ட் இறையன்பன் ஜோன்சன்

(திருச்செல்வம் ரவிச்சந்திரன்)
1ஆம் வட்டாரம், புங்குடுதீவு
திதி : 19 - 05 - 1993

வீறுடன் வேங்கையென வீரப்புயத்தோடு .....
வீணரை வீழ்த்திடவே விரைந்த களப்புலியே.....
ஆறுதல் இல்லை எமக்காயினும் அகமகிழ்வோம்......
காரிருள் மறைத்திடவும்....கலங்கிடவில்லை ஐயோ....
வாழ்வில் சுகம் நினைத்தே வசந்தத்தை தேடாது .....
தோளில் சுமந்தாய் சுடுகலனைத் தான்விரும்பி
நாளும் வரும் தமிழ்ஈழம் மலர்ந்திடவே
உன்நாமம் நிலைத்திருக்கும் நானிலம் தான் உள்ளவரை.

(4913) - குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

## அப்பையா இராசநாயகம்

இணுவில் தெற்கு, பிரபல வர்த்தகர் அப்பையா இராசநாயகம் 14. 05. 93இல் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20. 05. 93 வியாழக்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அன்று காலை 10 மணியளவில் தாவடி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.



## வீரவேங்கை வேல்மாறன்

[ஐயாத்துரை மனோகரன்] சுதா
(அல்லின் வீதி, காரைநகர்)

காரை மண்ணில்
வீரப்பிறப்பு
21-04-1975

கட்டுவன் மண்ணில்
வீரச்சாவு
30-05-1992

திதி: 19-05-1993

30 - 5 - 92 அன்று கட்டுவனில் இருந்து முன்னேற முயன்ற சிங்களக் கூலிப்படையுடன் நடந்த நேரடி மோதலில் வீரச்சாவை தழுவிக்கொண்டார்.

பத்தோடு இரண்டு மாதம் பகலிரவாய்க் காத்திருந்
தோம்-ஈழ
வித்தோடு சென்றுவிட்டாய், ''வேல்மாறா'' என்
மகனே
முத்தோடு பவள முகப்பொலிவு காண்பதெப்போ-
உயிர்ச்
சத்தேதுமில்லாமல் தவிக்கின்றோம் ஈழமதில்
மரணத்தின் பின்பும் 'மனோகரா' உன் புகழ் மாவீரன்-
நீர்
வாழ்கின்ற இடமே துயில் மாடம்
களத்தோடு உன்கதை முடியவில்லை எம் மகனே-சுதாவே
நீ மறைந்து ஓராண்டு என்ன நூறு ஆண்டு சென்றாலும்
உன் புகழ் மாறாது-தம்பி

எம் மகனுடன் வீரச்சாவு எய்திய பதினொரு வீர வேங்கைகளுக்கும் எங்கள் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ் வைபவத்தில் சக போராளிகளையும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

வே. ஐயாத்துரையும் (தகப்பன்)
குடும்பத்தாரும்

அல்லின் வீதி,
காரைநகர்.
(4915)

தற்போதைய முகவரி
சங்கரத்தை றோட்,
வட்டுக்கோட்டை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாதம் 19 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இந்திய - இஸ்ரேல் உறவு பலம் பெறுகிறது

[டில்லி]

இந்தியாவுக்கும் இஸ்ரவேலுக்குமிடையில் உறை நிலையில் இருந்த உறவு இஸ்ரவேலின் வெளியுறவு அமைச்சரின் இந்திய விஜயத்தைத் தொடர்ந்து புத்துயிர் பெற்றுள்ளது என பி.பி.ஸி. தெரிவித்தது.

இதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்குமிடையே பல்வேறு துறைசார்ந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன.

இஸ்ரவேல் வெளியுறவு அமைச்சர், இந்தியப் பிரதமர் மற்றும் குடியரசுத் தலைவர் ஆகியோரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். இவற்றைவிட பல அமைச்சர்களையும் இவர் சந்திக்க உள்ளார். வர்த்தகம், முதலீடு விவசாயம் ஆகிய துறைகளில் இருதரப்புப் பேச்சுக்கள் உட்பட ஒப்பந்தங்களும் செய்யப்படவுள்ளன

கடந்த 40 ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெறும் முக்கிய சந்திப்பாக இது விளங்குகிறது.

இந்தியாவின் அணிசாரா நிலைஇந்திய-சோவியத்உறவு, அமெரிக்கா மீதான அவநம்பிக்கை போன்ற காரணங்களால் இவ் இரு நாடுகளுக்கு மிடையில் உறவுகள் வலுவடையவில்லை.

தற்போது அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும்இடையில் உருவாகிவரும் உறவு நிலையைத் தொடர்ந்து இஸ்ரவேலுச்கும் இந்தியாவுக்கு மிடையிலும் ராஜீக உறவுகள் வலுவடையும் எனறு எதிர் பார்க்கப்படுகிறதுஎன மேலும் அது தெரிவிக்கிறது.

எனினும் சற்று எச்சரிக்கையுடனேயேஇந்திய இந்த உறவில் ஈடுபட்டுள்ளது இந்தியாவில் வாழும் 100 மில்லியன் முஸ்லிம் மக்களது இதயங்களைப் புண்படுத்தாத வகையில் இந்த உறவு இருக்க வேண்டும்.

அதேவேளை பாதுகாப்பு ஒத்துழைப்பு சம்பந்தமாகப் பேச்சு நடாத்துவதற்கு இரு நாடுகளும் தயங்கி நிற்கின்றன.

## மேமன் சகோதரரை தேடுவது பாகிஸ்தானின் கடமை

### இந்திய தெரிவிப்பு

(டில்லி)

பாகிஸ்தானில் மேமன் சகோதரர்கள் இருக்கிறார்களா இல்லையா என்பதைக் கண்டறிவது பாகிஸ்தான் அரசின் கடமையாகும் என்று இந்திய அரசு கூறிவிட்டது.

இது தொடர்பாக ஆராய இஸ்லாமாபாத் வருமாறு உள்துறை செயலாளருக்கு விடுக்கப்பட்ட அழைப்பையும் இந்திய அரசு நிராகரித்து விட்டது.

உள்துறை அமைச்சர் எஸ். பி.சவான் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் கூறுகையில் பம்பாய் குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக தேடப்படும் மேமன்சகோதரர்கள் கராச்சியில்இருப்பதற்கானபோதிய தகவல்கள் பாகிஸ்தானிடம் ஏற்கனவே வழங்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

தடுத்து வைக்கப்பட்ட

## புலிகள் தப்புகின்றனர் சுவாமி கவலை

[டில்லி]

தமிழகத்தில் தடா சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதிகள் தப்பிச் செல்லும் சம்பவங்கள் அதிகரித்திருப்பது குறித்து ஜனதாக் கட்சியின் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம்சுவாமி கவலை தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில்; தடாச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விசாரணைக் கைதிகளான விடுதலைப் புலிகள் தப்பிச் செல்லும் சம்பவங்கள் அதிகரித்து வருவது அங்கு சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்து வருவதைக் காட்டுவதாகவும் குறிப்பிட்டார்.

## அரேபியரை வெளியேற பாகிஸ்தான் பணிப்பு

(கராச்சி)

வடமேற்கு எல்லைப் பிராந்தியத்தில் சட்ட விரோதமாக குடி இருக்கும் அரேபியர்களை நாட்டை விட்டு வெளியேறும்படி பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது. வரும் மே 31ஆம்திகதிக்கு முன்னால் வெளியேறாது விடின் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என பாகிஸ்தான் அரசு எச்சரித்துள்ளது.

21ஆம் திகதி காலை 8.30 மணிக்கு தெரிவுப்போட்டிகளும், 22ஆம் திகதி பிற்பகல் 1.30மணிக்கு இறுதிப்போட்டிகளும் நடைபெறவுள்ளன.

### சுயதொழிலுக்கு கடன்

(தொல்புரம்)

இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வதியும் வறிய குடும்பங்களுக்கு கட்டுடையில் இயங்கி வரும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் சுயதொழில் வேலை வாய்ப்பு மீளளிப்புக் கடன் வழங்கி வருகின்றது.

சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவைச் சார்ந்த இடம் பெயர்ந்தோர் முகாம்களில் வதியும் தொழிலற்ற வறியவர்களுக்கு சுயதொழில் செய்து குடும்பத்தைக் காப்பாற்றும் பொருட்டு தலா இரண்டாயிரம் ரூபா வீதம் மீளளிப்புக் கடனாக வழங்கப்படுகிறது.

இதுவரை நூற்றுக் கணக்கானவர்கள் சுயதொழில் வேலைவாய்ப்பு மீளளிப்புக் கடனைப் பெற்று தொழில் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(41)

அரச ஊழியர்

குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பருத்தித்துறை துறைமுகத்திற்கு இந்த 146பேருமசென்றிருந்தார்கள். இவர்கள் தங்களுக்குள் முதல் 40 பேரையும் தெரிவு செய்யச் சம்மதிக்காமையே இதற்குக் காரணம். இறுதியில் எந்த அடிப்படையில் 40 பயணிகள் தெரிவு செய்யப்பட்டு குமண கப்பல் மூலம் சென்றார்கள் என்பது தெரியவரவில்லை. இதேவேளை, தமிழ் புத்தாண்டுக் கொண்டாட்டத்திற்காக வந்த, இந்த மாகாண சபை ஊழியர்கள் வந்து இருமாதங்களாகியும் இன்னும் திரும்பிச் செல்லவில்லை இவர்கள் அனைவரும் கப்பல் (நகர) மூலமே செல்ல விரும்புகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது

(சி)

பிரேத

யாளி எனக்கருதப்படும் நபரினதும் பிரேத பரிசோதனை அறிக்கைகள் பொலிசாரினால் கொழும்பு பதில் நீதிவான் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டன.

உலங்குவானூர்தி

மற்றும் வல்வைப் பகுதிக் குடியிருப்புக்கள் மேலாக பறந்து பல தடவைகள் வட்டமிட்டு பின்பலாலிப் பகுதி நோக்கி பறந்தது.

(யோ)

கொழும்பை

வாகம் என்பவை மாகாண சபைகளின் கட்டுப்பாட்டின் கீழ் வருவதால் மேலும் சிக்கல்கள் அதிகரிக்கும் என்றும் கூறப்படுகிறது.

வாழ்வில் சுகம் நினைத்தே வசந்தத்தை தேடாது .....
தோளில் சுமந்தாய் சுடுகலனைத் தான்விரும்பி
நாளும் வரும் தமிழ்ஈழம் மலர்ந்திடவே
உன்நாமம் நிலைத்திருக்கும் நானிலம் தான் உள்ளவரை.

(4913) – குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

## அப்பையா இராசநாயகம்

இணுவில் தெற்கு, பிரபல வர்த்தகர் அப்பையா இராசநாயகம் 14.05.93இல் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.05.93 வியாழக்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அன்று காலை 10 மணியளவில் தாவடி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. சற்குருநாதன்
ஐங்கரன் அரிசி ஆலை
இணுவில்.

இ, மயூரநாதன் (மகன்),
இ. சிவகுருநாதன் (மகன்),
அ. பற்குணம் (மருமகன்),
அ. செல்வநாயகம் (சகோதரன்.)
(4911

## அறிவித்தல்

ஈழத்து நூல், சஞ்சிகை, ஓவியம், சிற்பம் புகைப்படம், சித்த மருத்துவக்

## கண்காட்சி - 1993

### அனைத்துச் சித்த மருத்துவர்களினதும் கவனத்திற்கு

மேற்படி கண்காட்சியில் சித்த மருத்துவத் துறைக்கு மிக முக்கிய இடம் வழங்கப்படவுள்ளதால் இத்துறை பற்றிய கண்காட்சி எவ்வாறு அமைய வேண்டுமென்பது பற்றி ஆராய்வதற்காகக் கலந்துரையாடலொன்று எனது அலுவலகத்தில் 23-05 93-ம் திகதி காலை 10 மணிக்கு இடம்பெறும். இத்துறை சார்ந்த அனைத்து வைத்தியர்களையும் ஆர்வலர்களையும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றி உதவும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சுந்தரம் டிவகலாலா
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
இணைப்பாளர், கண்காட்சிக்
குழுக்களின் சார்பில்

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
93.05.18

(சி-6646)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 18-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9478

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

28-1706, 28-1062, 26-8419, 26-2291, 41-9663
24-8700, 24-7175, 41-8096, 42-2157, 24-9938
28-4183, 41-1227, 27-1375, 26-0495, 24-4701

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

இல்லை